**DEPOSITION OF WITNESS**

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.No.101/2025**

**PW-2**

**Date :-28.07.2026**

| | | | |
|---|---|---|---|
| Name | சுரேஷ் | | |
| த/பெ. | அந்தோனிசாமி | Calling | அரசு பேருந்து நடத்துனர் (ஓய்வு) |
| Village | சமயபுரம் | Religion | |
| Taluk | லால்குடி | Age | 65/2026 |

அரசு தரப்பு முதல் விசாரணை-

நான் தற்போது தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் நடத்துநராக பணி செய்து ஓய்வு பெற்று சமயபுரத்தில் வசித்து வருகிறேன் . என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் . கடந்த 01.08.2023 அன்று காலையில் 9.00 மணியளவில் கூத்தூர் பாலத்தில் விபத்து நடந்து விட்டதாக சொல்லி கொள்ளிடம் காவல் நிலைய போலீசார் விசாரித்து என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்கள் . என்னுடன் சேர்ந்து செங்குட்டுவன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தார் . பார்வை மகஜர் ஆ.சா. ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது . போலீசார் என்னை விசாரணை செயதனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இறந்து போன கஜராஜன் எனக்கு பழக்கமானவர் என்றால் சரியல்ல.அருகில் வசித்து வந்தவர் . சம்பவம் நடந்தாக சொல்லப்படும் இடம் தேசியநெடுஞ்சாலை என்றால் சரிதான் . 75 அடி அகலம் இருக்கும் என்றால் சரிதான். பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான் . என்ன காரணத்திற்காக சம்பவம் இடம் சென்றோம் என்ற காரணம் போலீஸ்

**விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் . இந்த விசாரணையில் குறிப்பிட்டுள்ளதை போலீஸ் விசாரணையில் கூறினேன் என்றால்சரிதான்.**

**Sd/-xxxx**

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made is his signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam